Reg. No. M. 2598.

ஓம்.
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ப்ரஸீத.

வருடசந்தா ரூபாய் 3—0—0.
பிரதி 1-க்கு ரூ. 0—6—0.

ந மாதவஸமோ தேவோ ந ச மத்வஸமோ குருஹு

ஸ்ரீ "ஹரிதாஸன்".

(ஸ்ரீமன் மத்வமதத்தின் விஷயங்களை அறிவிக்கும் ஓர் தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதிமாதமும் 10-ந்தேதி வெளிப்படும்.)

ஸ்ரீமன் மத்வமதத்தில் சொல்லியிருப்பதென்னவென்றால்:—

1. ஹரியே சர்வோத்தமன்; 2. உலகம் உண்மை; 3. ஐந்து விதமான பேதங்கள் 4. ஜீவர்கள் ஹரியின் அதீனர்கள்; 5. ஏற்றத்தாழ்வு; 6. மோக்ஷம் தன் ஸ்வரூப பூதமான சுகத்தை அனுபவித்தல். 7. பக்தியே முக்திக்கு மார்க்கம்; 8. ப்ரத்யக்ஷம் முதலிய மூன்று பிரமாணங்கள்; 9. சகல சாஸ்திரங்களினாலும் ஸ்ரீஹரி அறியப்படக்கூடியவன்.

புஸ்தகம் 1.	கொள்ளேகாலம் மார்ச்சு 1931. பிரமோதஸ பால்குணமீ—பிரஜோத்பத்திஸ சைத்ரமீ	பத்திரிகை 10.

பாமினி ஷட்பதி.

வேதகோசர வேணுநாத வி
நோத மந்தர சைலதர மது
சூதனச்சுத கம்ஸதானவரிபு மஹா மஹிம!
யாதவேந்த்ர யசோத நந்தன
நாத பிந்துகளாதிசய ப்ர
க்லாத ரக்ஷக வரத ரக்ஷிசு நம்ம நநவாத|| 7

அக்ஷயாஸ்ரித சுஜனஜன சம்
ரக்ஷன ஸ்ரீவஸ்த கௌஸ்துப
மோக்ஷதாயக குடிலதானவசிக்ஷ குமுதாக்
பக்ஷிவாஹன தேவசங்குல [க்ஷ|
பக்ஷ ஜகதத்யக்ஷ வாநிதி
லாக்ஷசக சர்வேஸ ரக்ஷிசு நம்ம நநவாத|| 8

சித்ரகூட நிவாஸ விஸ்வா
மித்ரக்ருது சம்ரக்ஷ சசிரவி
நேத்ர பவ்யசரித்ர சத்குணகாத்ர சத்பாத்ர|
தாத்ரிஜாந்தக கபடநாடக
சூத்ர பரமபவித்ர பல்குண
மித்ர வாக்யவிசித்ர ரக்ஷிசு நம்ம நநவாத|| 9

மங்களாத்மக துரிததிமிர ப
தங்க கருடதுரங்க ரிபுமத
பங்க கீர்த்திதரங்க புரஹரசங்க நீலாங்க|
அங்கதப்ரிய நங்கபித கா
ளிங்கமர்தன அமித கருணா
பாங்க ஸ்ரீ நரசிங்க ரக்ஷிசு நம்ம நநவாத|| 10

உகாதி.

நமது சந்தாபாந்தவர்களுக்கும், போஷகர்களுக்கும், நிரூபர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும், மற்ற சகோதர சகோதரிகளுக்கும், ஸ்ரீ பிரஜோத்பத்தி சம்வஸ்தரத்தில் ஸ்ரீ ஸ்ரீசன் ஆயுர் ஆரோக்யம் முதலிய எல்லாவித சம்பத்துக்களையும் அருள்வாராக !

இதுவரையிலும் நமக்கு உதவி புரிந்துவந்த மகாஜனங்களுக்கும், நன்கொடை தந்தருளிய தனவந்தர்களுக்கும், சந்தாதாரர்களாய்ச் சேர்ந்த சகோதரர்களுக்கும், நிரூபங்களை அனுப்பிக்கொடுத்த நேயர்கட்கும், ஏஜண்டுகளாயிருக்கும் அன்பர்களுக்கும், ஸ்ரீ ஹரிதாஸன் தன் மனமார்ந்த வந்தனங்களை சமர்ப்பிக்கிறான். தவிர வரும் பிரஜோத்பத்தி வருஷத்திலும் இதேமாதிரியான அன்பை சிசுவாயிருக்கும் ஸ்ரீ ஹரிதாஸன்மீது வைத்து அவன் முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவியை புரிந்து ஆதரிக்கவேண்டுமாய் தலைவணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

| ஓம் |

ஸ்ரீ கோவிந்த தாஸ போத.

(மதராஸ் ஸ்ரீ சுஜன விநோதனி சபையாரால் அனுப்பப்பட்டது.)

மோத பரித கேசவனெ ஈஜெக
காதிகர்த நெம்போது கரே (ப)

சாதிஸிகொம்பர விபுதர கைவசனப்ப|
ஸ்ரீதநெம்போது கரே (அ. ப.)

பொடவியொளகெ நாராயண தானு|
பிடதெயிப்ப நெம்போது கரெ (1)

மிருடனுதனிகெ மனெ சகலவாத ஈ|
ஜடஜங்கம வெம்போது கரெ (2)

அகதூரன மஹா உதரதொளகெ ஈ|
ஜகவு யிப்பதெம்போது கரெ (3)

சகநக மீருகசர்வகனிகெ எந்திகு|
விகட வில்லவெம்போது கரெ (4)

உம்புவல்லி உடுவல்லி நம்ம ஹரி|
இப்பாகிஹ நெம்போது கரெ (5)

கொம்புவல்லி கொடுவல்லி நம்ம ஹரி|
தும்பியிப்ப நெம்போது கரெ (6)

எல்லெல்லி ஹாடுகலு இல்ல நம்மஹரி
இல்லதஸ்தள வெம்போது கரெ (7)

பல்விதரிகெ பிரதிமல்ல ஈதகெணெ|
இல்ல எல்லி எம்போது கரெ (8)

வானர வந்தித ஸ்ரீனிவாஸனிகெ|
ஹானதெயில்ல வெம்போது கரெ (9)

ஸ்ரீனிதிபரனெந்து ஹொகளுவல்லி அனு|
மான வில்லவெம்போது கரெ (10)

வேததந்து வேதனிகித்தாதனெ|
பூதாதர னெம்போது கரெ (11)

மோததி போனுமெத்து முத்துவடு|
வாதநீத னெம்போது கரெ (12)

பரசுதாரி ரகுராம கிருஷ்ண|
வரபுத்தரூப னெம்போது கரெ (13)

துருகாரூட பகுரூபனுகுவது|
தரெயொளு நிஜவெம்போது கரெ (14)

சுப்திஸ்வப்ன ஜாக்ரெதெகளு ஜீவகெ|
கிலிப்தி மாள்பனெம்போது கரெ (15)

அப்தனுகி எடெபிடதெ சர்வரலி|
வியாப்திசிருவ னெம்போது கரெ (16)

ஜனன மரணகள ஜயிசிதவனு ரா|
மனு எனிசித னெம்போது கரெ (17)

குணபூர்ணனு ஆ தனுஜாரியெ ரா!
வணனகொந்த னெம்போது கரெ (18)

தனுஜரொந்திகெ துவேஷமாடி சு|
மனசர பொரெவ னெம்போது கரெ (19)

இனிது லீலெகளு தோரலு அவனிகெ கா|
ரணவில்ல வெம்போது கரெ (20)

நிகமகளெல்லவு ஈதன குணகள|
ஹொகளுதலிஹ வெம்போது கரெ (21)

அகணித மஹிமன நாமவெ ஸ்ருதிவ |
(வ) ர்ணகளு ஸ்வரகளெம்போது கரெ (22)

சாசிர நாமகெ வாசவாதிகளு |
கூசுகளெந்தெம்போது கரெ (23)

சோசிவிந்த அர்தாங்கியாதளு|
ஸ்ரீசதி நிஜவெம்போது கரெ (24)

அச்சுதனிகெ நம்ம குருவர மாருதி |
சொச்சலு மகனெம்போது கரெ (25)

ஹெச்சின பக்தரு இல்ல விதி ஹொரது |
நிஸ்சய நிஜவெம்போது கரெ (26)

ஈதனு பேளித மாதுகளனு ஹரி|
கூது கேள்வோ னெம்போது கரெ (27)

ஈதன நம்பித ஜனரனு கண்டதி |
ப்ரீதனப்ப னெம்போது கரெ (28)

முதமுனியாகி ஹனுமனெ ஜகதொளு|
உதிசிபந்த னெம்போது கரெ (29)

புதவர புரந்தர தாஸராகி நா |
ரதரெ நிந்தரெம்போது கரெ (30)

மத்வ மதவெ மூர்ஜக தொளகெல்லா பரி |
சுத்தவாத தெம்போது கரெ (31)

அத்வைதரனெல்லா கெத்து பரம ப் |
ரசித்தனாத னெம்போது கரெ (32)

ஹரியநாமகெ ஹரியத பாபவு !
தரயொளகில்ல வெம்போது கரெ (33)

ஹரிஸ்மரனெகெ சரியாத புண்யவு |
இரசல்லது எம்போது கரெ (34)

ஜனருமாடுவ த்வந்த கர்ம ஹரிசேவெ |
எனிபுதெம்போது கரெ (35)

மனதி நித்யதி கோவிதரீபகெ |
நெநெசுதிர்ப ரெம்போது கரெ (36)

அஜனய்யன பாதாப்ஜ பஜிசுவரெ |
நிஜத்விஜரஹ ரெம்போது கரெ (37)

சுஜன ரொந்திகெ த்வேஷமாடுவரெ|
தனுஜரெனி பரெம்போது கரெ (38)

விதி நிஷேதகளு இதரரிகுண்டு |
புதரிகெல்லவெம்போது கரெ (39)

ஸ்ரீதநுளிது கனகர்ம மாள்பரிகெ |
மோதவெ இல்லவெம்போது கரெ (40)

முக்தி மார்ககெ எல்லகித்த ஹரி |
பக்தியெ வரவெம்போது கரெ (41)

யுக்திய வசனகளில்லவு வே |
தோக்திகளஹ வெம்போது கரெ (42)

அரியலு ஹரிகுண ஓர்வ சரச ச |
த்குருவர பேகெம்போது கரெ (43)

குருவின சுந்தர சரணஸ்மரண்யெ |
பரம சௌக்கிய எம்போது கரெ (44)

ஹரியெ பரம மிக்காதவாரதன |
சரணசேவகரு கரெ கரே (45)

குருவின கருணவெ பரமசௌக்யவனு |
கரெயுதலிருவுது கரெ கரே (46)

ரகுபதியெம்போ நாமத்யானதிம்|
தகஹொருவது கரெ கரே (47)

ஜகதோதர சிரிகோவிந்த விடல |
நிகமகோசரனு கரெ கரே (48).

—: பத்ரம் சுபம் மங்களம் :—

மணிமஞ்சரி—18.

4-ம் சர்க்கம்.

(கும்பகோணம் எம். ராம ராவ் எழுதியது)

[156-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

18. உத்தவம் ப்ரேஷயாமாஸ வ்ரஜசோகாபனுத்தயே| பகவான் மகதாதீசம் புனரப்யர்த்தயத் யுதி ||

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோகுல ஜனங்களின் (கோபஸ்திரீகளின்) துக்கத்தைப்போக்க உத்தவனை அனுப்பினார். மகததேசத் தரசனை (ஜராஸந்தனை) மறுபடியும் யுத்தத்தில் ஹிம்ஸித்தார்.

19. ஸ ஸ்ருகாலாதிபம் ஹத்வா தத்புத்ரம் பர்யபாலயத்| இதி சித்ராணி கர்மாணி சகார புருஷோத்தம:||

அவர் (ஸ்ரீகிருஷ்ணர்) (கரவீரபுரத்தரசனை) ஸ்ருகால வாஸுதேவனைக்கொன்று அவனுடைய புத்ரனை (அந்த ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்து) காப்பாற்றினார். (க்ஷராக்ஷர புருஷர்களைக்காட்டிலும் உத்தமனான) ஸ்ரீ கிருஷ்ணர் இவ்விதமான அற்புதமான காரியங்களைச் செய்தார்.

20. பீஷ்மகஸ்ய ஸுதாம்தேவீம் ருக்மணீம் அவஹத் தத:| விக்ஞானானந்த ரூபிண்யா ஸ ரேமே ரமயா தயா||

பிறகு அவர் (ஸ்ரீ கிருஷ்ணர்) பீஷ்மகராஜனின் மகளான ருக்மணீதேவியை விவாஹம் செய்துகொண்டார். விக்ஞானம், ஆனந்தம் ஆகிய இவைகளாலாகிய தேகத்தையுடையவளாயும் லக்ஷ்மீதேவியின் அவதாரமாயுமுள்ள அவளுடன் கூடி ரமித்தார்.

குறிப்பு:—மானிடர்களின் அறிவுக்கு 'ஞானம்' எனவும் தேவர் முதலியோரின் அறிவுக்கு 'விக்ஞானம்' எனவும் பெயர்.

21. லப்தம் ஸத்ராஜிதா ஸூர்யாத் ஸ ஸிம்ஹாப ஹிருதம் தத:| ரத்னம் ஜாம்பவதா நீதம் ஜாம்பவத்யா ஸஹ அனயத்||

ஸ்ரீ கிருஷ்ணர் ஸத்ராஜித் என்ற யாதவனால் சூரியபகவானிடமிருந்து (தபஸால்) அடையப்பட்டதாயும், பிறகு (அதையணிந்து வேட்டைக்குச் சென்ற ப்ரஸேனன் என்ற அவன் தம்பியைக் கொன்று) ஓர் சிங்கத்தால் கவரப்பட்டதாயும் (அந்த சிங்கத்தைக் கொன்று) ஜாம்பவனால் கொண்டு போகப்பட்டதாயும் உள்ள (ஸ்யமந்தக) மணியை ஜாம்பவதி (என்ற பெண்மணியுடன்) கூட கொண்டுவந்து சேர்த்தார்.

குறிப்பு:—இச்சரித்திரத்திற்கு "ஸ்யமந்தகோபாக்யானம்" எனப்பெயர். விநாயக சதுர்த்தி தினம் இக்கதையை சிரவணம் செய்து (ஸிம்ஹ: ப்ரஸேனம் அவதீத் ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத:| ஸுகுமாரக மா ரோதீ: தவ ஹ்யேஷ ஸ்யமந்தக:) என்ற சுலோகத்தை அன்று சந்திர தர்சனம் பண்ணினவர்கள் அனுஸந்தானம் செய்துகொண்டால் வீண் அபவாதத்துக்குப் பாத்திர மாகமாட்டார்கள்.

22. ஸத்ராஜிதே தமௌ ரத்னம் தேன தத்தாம் ஸரத்னகாம்| ஸத்யபாமாம் உதவஹத் ஸாக்ஷால்லக்ஷ்மீம் பராத்பர:||

உத்தமர்களான (ரமாப்ரம்மாதிகளைக் காட்டிலும்) உத்தமரான ஸ்ரீ கிருஷ்ணர் அந்த மணியை ஸத்ராஜித்தினிடம் (தன் அபவாதத்தைப் போக்கடிக்க) கொடுத்தார். அவனால் அந்த மணியுடனேகூட தானம் கொடுக்கப்பட்ட (அவனது மகளாயும்) ஸாக்ஷாத் லக்ஷ்மியாயும் உள்ள ஸத்யபாமையை மணந்தார்.

குறிப்பு:—ஸ்ரீ கிருஷ்ணரின் அஷ்ட மகிஷிகளுக்குள் ருக்மணியையும் ஸத்யபாமையும் லக்ஷ்மியின் ஸாக்ஷாத்தான அவதாரங்கள். ஜாம்ப

மணிமஞ்சரி—18.

வதி முதலியோரிடம் லக்ஷ்மியின் ஆவேசம்தான் உண்டு. இவ்விதம் அறியாவிடில் அனர்த்தங்கள் உண்டு. கருட கர்வபங்கம் முதலிய ஹரிகதைகளில் ஸத்யபாமைக்கு அஹங்காரம் முதலிய தோஷங்கள் இருப்பதாக வர்ணிக்கப்படுகின்றன. இவையாவும் அஸுரமோகனார்த்தமே தவிர வேறல்ல. இதைத் தெரிவிக்கவே சுலோகத்தில் 'ஸாக்ஷாத் லக்ஷ்மீம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

23. ஹதவான் ஸானுஜம் ஹம்ஸம் க்ருஷ்ணோரேமே ஸ்வதாமனி। புத்ரான் ப்ரத்யும்ன ஸாம்பாதீன் ருக்மிண்யாத்யா ஸ்வஜீஜனயத் ||

ஸ்ரீ கிருஷ்ணர் (டிபிகன் என்ற) தம்பியுடன் கூடின ஹம்ஸன் (என்ற அசுரனைக்) கொன்று (துவாரவதியிலுள்ள) தன் அரண்மனையில் சுகமாய்க் காலம் கழித்துவந்தார். ருக்மணீ முதலிய (மனைவிகளிடம்) ப்ரத்யும்ன் ஸாம்பன் என்ற பல புத்திரர்களை உண்டு பண்ணினார்.

குறிப்பு :—ஸாம்பன் ஜாம்பவதியின் குமாரன் ஸ்ரீ கிருஷ்னரின் 16108 மனைவிகளில் ஒவ்வொருவருக்கும் பத்து புத்திரர்களும் ஒரு கன்னிகையும் பிறந்தனர்.

(பாண்டவர்களின் கதை மீண்டும் தொடரப்படுகிறது.)

24. பாண்டவா: துரோணம் ஆஸாத்ய க்ருதசஸ்த்ராஸ்த்ர சிக்ஷணா:। ஸர்வவித்யாதி சயினோமுமுது: க்ருஷ்ணஸங்கதா:||

பாண்டவர்கள் துரோணாசாரியாரையடைந்து சஸ்திரம், அஸ்திரம் இவைகளில் பயிற்சி பெற்றும் எல்லா வித்தைகளிலும் மேன்மையடைந்தும் (ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசினத்திற்காகத் துவாரகை சென்று) ஸ்ரீ கிருஷ்ணருடன் (எல்லா வ்யவஹாரங்களிலும்) கூடி சுகித்திருந்தனர்.

குறிப்பு :—சஸ்திரம் என்றால் எஃகால் ஆகிய ஆயுதம். இதை ப்ரயோகிக்க யாதொரு தேவதையின் உதவியும் தேவையில்லை. அஸ்திரம் என்றலோ ப்ரம்மா, வாயு, அக்னி, வருணன் முதலிய தேவதைகளில் யாரையாவது மந்திர ப்ரபாவத்தால் வசம் செய்துகொண்டு பிரயோகிக்கப்படும் பொருள். இது மேற்கண்ட ஆயுதமாயாவது புல் முதலிய அற்ப வஸ்துவாகவாவது இருக்கலாம். (ஸ்ரீ ராமர் காகாஸுரனின் மீது ஓர் தர்ப்பையை அஸ்திரமாக விடுத்ததை கவனிக்க) அத்தேவதைகளையொட்டி பிரம்மாஸ்திரம் வாயவ்யாஸ்தரம், ஆக்னேயாஸ்திரம், வாருணாஸ்திரம் என்ற பல பெயர்கள் உண்டு.

25. ஸம்பாவிதா: பகவதா பாண்டவா: ஸ்நேஹ ஸம்ப்ருதா:। அநுக்ஞாதா: புரம் ஜக்மு: ஸதா தத்பாவ தத்பரா:||

பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் கௌரவிக்கப்பட்டும் (ஊருக்குத்திருப்பிப்போக) விடையளிக்கப்பட்டும் (அவரிடம்) பக்திமேலிட்டு எப்பொழுதும் அவருடைய பாவனைகளிலே ஈடுபட்டும் ஹஸ்தினாபுரத்திற்கு சென்றனர்.

26 ஸ்வாமித்வேன ஸுஹ்ருத்வேன பந்துத்வேன ச பாண்டவா:। ஸகித்வேன கதித்வேன தமேவ சரணம் யயு:||

(பகவானை விட்டுபிரிந்து வந்தபோதிலும்) பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரே (தங்களுக்கு) ஸ்வாமி யெனவும், மெய்யன்பன் எனவும் உறவினன் எனவும், தோழன் எனவும் கதி (அடையத் தகுந்தவன்) எனவும் (அனுசந்தானம் செய்துகொண்டு) அவரையே சரணமடைந்தனர்.

27. புராத் நிர்யாபிதா துஷ்டை: ஹிடிம்பம் ச பகம் ததா। நிஹத்யா பாண்டவா: ப்ராபு க்ருஷ்ணம் க்ருஷ்ணாம் ஸ்வயம்வரே ||

(தொடரும்)

மத்வவிஜயம்—17.

2-ம் ஸர்க்கம்.

(கும்பகோணம் எம். ராம ராவ் எழுதியது.)

[158-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

21. தீவ்ரை: பயோவ்ரதமுகை: விவிதை: வ்ர்தாக்ர்யை: ஜாயாபதீ குணகணர்ணவ புத்ரகாமௌ | ஸம்பூர்ணபூருஷம் அதோஷயதாம் நிதாந்தம் தேவேரிதௌ இவ புரா அதிதி கஸ்யபௌ தௌ ||

தத்வஞானம் முதலிய குணங்களுக்குக்கடல் போன்ற புத்திரனைப் பெற விரும்பின, அந்த தம்பதிகள் முன்னொருகால் (வாமனவதார காலத்தில்) பிரம்மதேவரால் கட்டளையிடப்பட்ட அதிதிதேவி, கஸ்யபர் இவர்களைப்போலவே, செய்வதற்கு முடியாத பயோவ்ரதம் முதலிய பலவித உத்தம விரதங்களால் அனந்தகுணபூர்ணரான பகவானை நிரம்ப திருப்தியடையச் செய்தார்கள்.

குறிப்பு :—பசும்பாலொன்றயே ஆகாரமாகக் கொண்டிருப்பது பயோவ்ரதம் எனப்படும்.

22, நாதஸ்ய பூரிகருணாஸுதயா அபிஷிக்தௌ ஸ்ரீ ஸ்ரீதரப்பிரததி ஸாரசரீரயஷ்டீ | பூரிவ்ரதப்ரவதீவ்ய ஸுகாந்திமந்தௌ தௌ தேகசுத்திமதி மாத்ர மதாலபேதாம் ||

பிறகு ஸ்ரீ ஹரியின் பூர்ண கிருபையென்னும் அமிர்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களாயும், லக்ஷ்மிதேவி ஸ்ரீ நாராயணன் ஆகிய இருவர்களின் மகாஸந்நிதானத்தைப் படைத்தால் சிறந்ததான மெலிந்த தேகங்களையுடையவர்களாயும் பலவித வ்ரதானுஷ்டானத்தினால் ஏற்பட்ட திவ்யமான காந்தியை அடைந்தவர்களாயுமுள்ள அவர்களிருவரும் மிகுந்த தேகசுத்தியைப் பெற்றனர்.

23. காந்தாத் ருதௌ ஸமுசிதே அத பபார கர்ப்பம் ஸா பூஸுரேந்திர துஹிதா ஜகதாம் ஸுகாய | அச்சாம்பரேவ ரஜனீ பரிபூரிதாசா பாவின்யபாஸ்த தமஸம் விதுமாத்ய பக்ஷாத் ||

பிறகு நிர்மலமான ஆகாசத்தையுடையதாயும் (சந்திரிகையால்) வியாப்தமான திசைகளையுடையதாயும் கிரமமாய் விருத்தியடைவதாயுமுள்ள இரவு என்னும் ஸ்திரீயானவள் வஸந்தம் முதலிய தகுந்த ருதுகளில் லோகசுகத்தின் பொருட்டு சுக்லபக்ஷம் என்னும் புருஷனிடமிருந்து இருட்டைப் போக்கடிக்கும் சந்திரனென்னும் புத்திரனைப் பெறுவதுபோல், பரிசுத்தமான ஆடைகளையணிந்தவளாயும், தனதுமனோபீஷ்டம் நிறைந்தவளும், கிரமமாய் விருத்தி பெறுகிறவளும், பிராமணசிரேஷ்டரின் புதல்வியுமான (வேதவதி) ஸஜ்ஜனர்களின் க்ஷேமார்த்தமாக, ஆதிபூதனை ஸ்ரீ ஹரியையே தோழனாகக்கொண்ட தன் கணவனிடமிருந்து (கர்ப்பதானத்திற்குத்தகுந்த) ருது காலத்தில், அக்ஞானம் முதலிய தோஷங்களையொழித்த ஒரு புத்திரனைக் கருத்தரித்தாள்.

24. தம் பூர்வபக்ஷ ஸிதபிம்பமிவ ப்ரவிருத்தம் யாவத் நிவிஜேந்திரவனிதா ஸுஷுவே அத்ர தாவத் | அம்சேன வாயு: அவதீர்ய ஸரூப்யபீடே விஷ்ணும் ப்ரணம்ய பவனம் ப்ரயயௌ ததீயம் ||

பிராமண சிரேஷ்டரான (மத்யகேஹரின்) மனைவி வளர்பிறை சந்திரமண்டலம்போல் விருத்தியாக்கிக் கொண்டுவந்த கர்ப்பத்தை இப்பூமியின்கண் பிரஸவித்தவுடன் அந்த (பூமியில் அதரிக்கக் கட்டளையிடப்பட்ட) வாயுபகவான் ஓர் அம்சத்தால் பூமியில் அவதரித்து உடுப்பியில் (கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்) அனந்தேசுவரன் என்ற விஷ்ணுவை நமஸ்கரித்துவிட்டு மத்யகேஹரின் வீட்டிற்குச் சென்றனர்.

மத்வவிஜயம்—18.

25. ஸம்பூர்ண லக்ஷணசணம் நவராஜ மான துவாராந்தரம் பரமசுந்தர மந்திரம் தத்|| ராஜேவ ஸத்புரவரம் புவனுநிராஜோ நிஷ்காஸயன் பரம் அஸௌ பகவான் விவேச ||

ஓர் அரசன் நகரலக்ஷணங்களெல்லாம் அமைந்ததும் ஒன்பது கோட்டைவாயில்களை யுடையதும் பரமசுந்தரமான வீடுகளையுடையது மான ஓர் பட்டணத்திலிருந்து தன் சத்ருவை வெளியேற்றி தான் உட்பிரவேசிப்பதுபோல, லோகராஜாவான வாயுபகவான் (வேதவதியின் உதரத்திலிருந்து வெளிப்பட்ட) ஓர் ஜீவனின் முப்பத்திரண்டு உத்தம புருஷலக்ஷணங்களமையப் பெற்றதும், நவத்துவாரங்களை யுடையதாயும் அழகிய வீடு போன்றதாயும் உள்ள சரீரத்திலிருந்த ஜீவனை வெளியே தள்ளிவிட்டுத் தான் உட்ப்ரவேசித்தார்.

குறிப்பு :—(1) வாயுபகவானுக்குக் கர்ப்பவாஸமில்லாததால் அதை ஓர் ஜீவன் அனுபவித்துக்கொண்டிருந்து கடைசியில் வெளிவந்தான். அவன் வெளிவந்தவுடனே வாயுபகவான் அந்த ஜீவனுடைய சரீரத்தில் உட்புகுந்து அவனை வெளியே ஓட்டிவிட்டார். பிறகு அந்த ஜீவனின் சரிதம் நன்கு தெரிவதாயில்லை.

(2) இது நமது ஆசாரியாளின் அவதாரத்தைக் குறிக்கும் சுலோகமானதால், ஸ்ரீ கிருஷ்ணுவதாரத்தைக் குறிக்கும் 'தமத்புதம் பாலகம் அம்புஜேக்ஷணம்' என்று ஆரம்பிக்கும் இரண்டு சுலோகங்களைப்போலவே இந்த சுலோகமும் ஒவ்வொரு மாத்வராலும் மனப்பாடம் செய்யப்பட்டுப் பிரதி தினமும் படனம் செய்யத்தகுந்தது.

26. ஸந்துஷ்யதாம் ஸகலஸன்னிகரை: அஸ்த்பி: கித்யேத வாயு ரய மாவிரபூத் ப்ருதிவ்யாம் | ஆக்யன்னிதீவ ஸுரதுந்துபி மந்த்ர நாத: ப்ராச்ராவி கௌதுகவஞ்ச: இஹ மானவைஸ்ச ||

(அவ்வவதாரகாலத்தில்) 'இந்த வாயுபகவான் புவியில் அவதரித்திருப்பதால் எல்லா ஸஜ்ஜனர்களின் கூட்டமும் ஸந்தோஷ மடையக்கடவது, துர்ஜனர்கள் துக்கப்படக்கடவது' என்று தெரிவிப்பதுபோல் தேவதைகளின் பெரிவாத்தியத்தின் கம்பீரமான த்வனியொன்று பூமியிலுள்ள எல்லா ஜனங்களாலும் ஆச்சரியத்துடன் கேட்கப்பட்டது.

27. நாதம் நிஷேவ்ய பவனுநிதூரம் ஆப்த: ப்ராக்ஞோ மஹப்ரகிருத துந்துபி நாத பூர்வாத் || புத்ரோத்பவ சிரவணதோ மஹதாப்ய ஸௌக்கியம் ஞானம் பரோக்ஷ பதமபி அமத இஷ்டஹேதும் ||

பண்டிதரான (மத்பகேஹர்) தனது தேவதையான (அனந்தேசுவரனை) ஆராதித்துவிட்டு வீட்டின் அருகே வந்தவுடன் (புத்ரஜனன) உத்ஸவத்தில் நிகழ்ந்த பேரி முழக்கத்தை முதலிலும் (பிறகு ஜனங்களின் மூலமாக) புத்ரோத்பத்தியையும் கேட்டு அளவிலா ஆனந்தத்தையடைந்து மறைபொருளின் அறிவுகூட ஸுகஸாதனமென்று உணர்ந்தார்.

குறிப்பு : ஓர் பொருளை நேரில் கண்கூடாகப் பார்ப்பதினால்தான் ஆனந்தமுண்டாகும் என்ற நியமம் கிடையாது. அதைப்பற்றிக் காதில் கேள்வியுற்றாலும் கூட ஆனந்தமுண்டாகும். பகவானுடைய அரிய பெரியமகிமைகளைப்பற்றி சாஸ்திரவாயிலாக நமக்கு ஏற்படும் ஞானத்திற்கு 'பரோக்ஷ ஞானம்' எனப்பெயர். பகவானையே நமது கண்களால் நேரில் பார்ப்பதினால் உண்டாகும் ஞானத்திற்கு 'அபரோக்ஷ ஞானம்' எனப்பெயர். ஞானம் பரோக்ஷமாயினும் அபரோக்ஷமாயினும் ஸுகஸாதனமானதே. இவ்விஷயத்தையே நமது பகவத்பாதாள் 'அனுவ்யாக்யானம்' என்ற உயர்தர நூலில் "அபரோக்ஷம் பரோக்ஷம் வா ஞானம் இஷ்டஸ்ய ஸாதனம்" என்று விஸ்தாரமாகக் கூறியிருக்கிறார். (தொடரும்.)

ஹரி பக்தியே எல்லாந்தரும்.

"இந்தியன்" ஆசிரியர்
கே. வெங்கட ராவ் எழுதியது.

வைஷ்ணவம் என்பது பக்தியோகமேயாகும். பக்தியானது ஞானபக்தி, ப்ரேமபக்தி என்று இரண்டு வகைப்படும். ஒரு வஸ்துவின் மெருமை யையும் சக்தியையும் நன்ருக தெரிந்துகொண்டு அதன்பிறகு அவ் வஸ்துவின்பேரில் பக்தி கொள் வதானது ஞ்யான பக்தி யெனப்படும். ஒரு வஸ்து வின்பேரில் பக்தி செலுத்துவதே பரமானந்தம் என்னும் உணர்ச்சியுடன் தன்னலமில்லாமல் பக்தி செலுத்துவது பிரேம பக்தி யென்பதாகும். ஸ்ரீ கிருஷ்ணனே எல்லா இன்பத்திற்கும் இனிமைக் கும் உருவம்போல் காண்கின்ருன். ஸ்ரீ கிருஷ் ணனைப்பற்றி நினைக்க நினைக்க மனம் பரமானந்தம் அனுபவிக்கிறது; உடம்பு முழுதும் ஓர் புதியசக்தி வியாபிக்கிறது; மனம் பரிசுத்தத்தையடைய முன் செல்கிறது. ஆஹா! "ஸ்ரீ கிருஷ்ணு" என்னும் திவ்ய நாமமே எவ்வளவு இன்பம் தருவ தாயிருக்கிறது. இந்நாமத்தின் பெருமைக்கும் ஓர் எல்லையுண்டா?

"ஸ்ரீ கிருஷ்ணு!" என்னும் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் கோபிகைகள் தம்மையும் உலகத்தையும்மற்றெல்லாவற்றையுமறந்துமெய்யும் மறந்து நின்றனர். ஸ்ரீ கிருஷ்ணு என்னும் நாமத் திலுள்ள ஆனந்தத்திலேயே பரமானந்தம் அனுப விக்கின்றனர். பொதுவான சபையில் தன் மான மே போகுங்காலத்தில் தர்மபுத்ரனின் மனைவி "ஸ்ரீ கிருஷ்ணு" என்று ஓர் முறை உச்சரித்ததும் மானம் காக்கப்பட்டது. துரியோதனுதிகள் வெட்கத்தால் தலை குனிந்தனர். துடுக்கான துச் சாசனன் தலை சுழன்று கீழே வீழ்ந்தான். உயிர் போகுந் தருவாயில் கஜேந்திரன் "ஸ்ரீ கிருஷ்ணு" என்று தியானித்ததும் உடனே அபயம் கிடைத் தது. ஆஹா! கிருஷ்ணு என்னும் ஓர் வார்த் தைக்கு எவ்வளவு மகிமை! "ஸ்ரீ கிருஷ்ணு!" என்று ஓர் முறை கூறினுல் நாம் செய்துள்ள பாபமெல்லாம் அடியோடு ஒழிந்துபோகும் என்று நமது ஆசார்யர்கள் கூறி யிருக்கிருர்களல்லவா? "ஸ்ரீ கிருஷ்ணு" என்னும் ஓர் வார்த்தையில் எவ்வளவு மகிமை இருக்கவேண்டும்?

நமது மனத்தையே அர்ப்பணிப்பதே ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நாம் செய்யும் பூஜையாகும். நமது மனதைப் பரிபூர்ணமாக அர்ப்பணித்தால்தான் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பிரீதியாகும். இத்தகைய அர்பணம் செய்யாத பூஜையோ வெறும் வெளி மயக்கேயாகும் "துஷ்டர்களைத் தண்டித்து சன் மார்க்கர்களைப் பரிபாலிக்கவே ஸ்ரீ பகவானிட அவதாரங்கள் உலகில் தோன்றுகின்றன" என்று கீதை சொல்லுகிறது. ஆனுல் ஸ்ரீ கிருஷ்ணபர மாத்மாவோ ஸ்ரீ பகவானேயாவார். ஸ்ரீ கிருஷ்ண னிட திருவிளையாடல்களோ அனேகம். ஒவ் வொன்றையும் நினைக்க நினைக்க ஸ்ரீ கிருஷ்ண பராக்கிரமத்தை அறிகிருேம். யோகத்தில் சிறந்த வர்களே செய்து முடிக்கவல்ல மகத்தான காரி யங்களை ஸ்ரீ கிருஷ்ணர் செய்து முடித்திருக்கிருர்.

யோகீஸ்வரர்களின் சக்திகளோ அனேக மாகும். அவைகளில் கீழ்காணும் 10-குணங்கள் முக்யமானவை. (1) பசியையும் தாகத்தையும் விட்டொழிப்பது (2) இங்கு ஏற்படும் சப்தத்தை வெகு தூரத்திலிருந்து கேட்பது. (3) வெகு தூரத்திலிருந்து பார்ப்பது (4) மனோவேகத்தில் தன் உடலை செலுத்துவது (5) நினைத்த ஸ்வரூ பத்தை அடைதல் (6) வேறு தேகத்தில் புகுந்து கொள்வது (7) நினைத்தபோது இறப்பது (8) தேவஸ்திரீகளுடன் விளையாடுவது (9) நினைத்த வஸ்துவை அடைவது (10) தன்னைப்பார்த்து எவரும் வணங்கும்படி செய்தல். இதுவன்றி வேறு சக்தியும் உண்டு. அதாவது (1) இறந்த

காலம், நிகழ்காலம், வரும்காலம் முக்காலங்களையும் உணர்தல். (2) குளிர், உஷ்ணம், சுகம், துக்கம் இதைப்போன்றவைகளை ஒரே மனோபாவத்துடன் சகித்துக்கொள்வது. (3) மற்றவர்களின் மனதில் உள்ளதை அறிந்து கொள்வது. (4) அக்னி, ஜலம், விஷம், உஷ்ணம் முதலியவற்றின் சக்தியை அடக்கிவைப்பது. (5) வேறொருவன் தன்னை எதிர்க்கமுடியாத நிலையாத நிலமையடைவது. மேற்கூறிய குணங்கள் யோகசித்தியாகும்; யோகீஸ்வரர்களுக்கு இக்குணங்கள் லபிக்கும். ஸ்ரீ கிருஷ்ண பகவானிட லீலைகள் ஒவ்வொன்றையும் சற்று உற்று நோக்குவோருக்கு இதுவெல்லாம் யோகீஸ்வரரின் குணங்கள் என்பது நன்கு தெரியும். மேற்குறித்த குணங்கள் ஸ்ரீ கிருஷ்ண லீலைகளில் ததும்பி நிற்பதால் யோகீஸ்வரர்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியானவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவென்பது அவரிட லீலைகளாலேயே நன்கு புலப்படும்.

கோபிகைகளுடன் கிருஷ்ணன் புரிந்த லீலையோ ஓர் பெருத்த உண்மையைப் போதிக்கிறது. இயற்கைக்கும் பரமாத்மாவுக்கும் முள்ள சம்மந்தத்தைக் காட்டுகிறது. பரமாத்மாவோ, யோகீஸ்வரனாகவும் அன்பின் அவதாரமாகவும் தோன்றுகிறார். ஸ்ரீ கிருஷ்ணனே அன்பு. கோபிகைகளில் தலைவியானவள் ராதையாகும். பக்தியே அவதாரமானவள் ராதை. கிருஷ்ணனின் உயிரைப்போன்ற அன்பு அல்லது பக்தியே உருவாயமைந்தவள் ராதையாகும். கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணன்மீது வைத்திருந்த அன்போ தன்னலமற்றது. கண்ணனின்மீது பக்தி செலுத்த வேண்டுமென்றே பக்தி செலுத்தினர். முக்திக்காகவே பக்தியே யொழிய வேறோர் சுகத்திற்காகவோ நன்மைக்காகவோ பக்தி செலுத்தினவர்களல்ல. அன்பின் அவதாரமான கிருஷ்ணனின்பேரில் அன்பு செலுத்தினர் கோபிகைகள். கோபிகைகளுடன் அன்புடன் நடனமாடிய விநோதத்தின் ஒளியே உலகெல்லாம் பரவி உலகையே பரிமளித்தன. இயற்கை யென்பது கடவுளின் மனோநிலையின் சக்தியாகும். இயற்கையோ பெண். இயற்கையின் சுடர்களான பெண்களே கோபிகைகள். இயற்கைக்கு அதிபதியாகிய பரமாத்மா, ஸ்ரீ கிருஷ்ணன். ஸ்ரீ கிருஷ்ணனின் கடாக்ஷம் வேண்டுமானால் கோபிகைகளைப் போன்ற தன்னலமற்ற அன்பைக் கொள்ள வேண்டும். தன்னைப் பரிபூர்ணமாக "ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்" என்று தியாகம் செய்து ஆசையென்பதையும், வேண்டும் என்பதையும் விட்டு கோபிகைகளைப்போல் கிருஷ்ணனுக்காகவே பக்தி கொள்ளவேண்டும்.

ஒருவன் ஸ்ரீ பகவானிட பாதாரவிந்தங்களையடையவேண்டுமாகில் எவ்வளவோ கஷ்டங்களையனுபவிக்கவேண்டும்: சாஸ்திரங்களின்படி ஒழுகுவது மகா கடினம். கலிகாலத்தவர்கள் வெகு சுலபமாக முக்தியை யடையலாம். அதாவது ஜபத்தின் மூலம் நற்பதவி பெறலாம். ஸ்ரீ பகவானிட நாமத்தை நம் ஆத்மாவில் பதித்துக்கொண்டோமானால் புசுவின் பாதச்சுவட்டை எவ்வளவு சுலபமாக தாண்டமுடியுமோ அவ்வளவு சுலபமாகவே உலகவாழ்கை யென்னும் சாகரத்தை தாண்டிவிடலாம். இவ்வாறு கடவுளின் நாமத்தை ஆத்மாவில் பதித்துக்கொள்ளவேண்டுமானால் அதற்கு சித்தசுத்தி அதாவது அழுக்கில்லாத மனதை பக்குவம் செய்துகொள்ளவேண்டும் ஸ்ரீ பகவான் எல்லோரிட மனதிலும் ஒளி பரவி நிற்கிறார். அவன் ஏழையானாலும் பணக்காரனானாலும், எவனானாலும் எல்லோரிட மனதிலும் ஸ்ரீ கிருஷ்ணனே ஒளி பரவியிருக்கிறானென்னும் எண்ணத்தை எவன் ஒருவன் கொள்கிறானோ அவன் விரைவில் சித்த சுத்தி பெறுவான்.

முக்தி என்பது என்ன? முக்தி என்னும் வார்த்தையைக்கண்டே அனேகர் பயப்படுகின்றனர். முக்தி என்பதை யடைய நாம் கஷ்டப்

யடுவதைக் காட்டிலும் இதே நிலைமையிலிருக்கலாம் என்று எண்ணுவர். நம் மனதிலேயே ஸ்ரீ கிருஷ்ணன் இருப்பதாக நினைத்துக்கொள்ளுவதே பரமானந்தம். முன்னொருகால் சைதன்யர் என்பவர் அவதரித்தார். இவர் எல்லா வேதங்களையும் நன்கறிந்தவர். எல்லோர் மனதிலும் ஸ்ரீ கிருஷ்ணன் வசிக்கிறார் என்னும் திடமான நம்பிக்கையை யுடைவர். தாழ்ந்தவனிடத்திலும் உயர்ந்தோனிடத்திலும் கண்ணன் ஜ்வலிப்பதாக உணர்ந்திருந்தார். இவரோ "கிருஷ்ணா! கிருஷ்ணா" என்று சொல்லிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடுவார். தம்மையு மறந்து கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிய "கிருஷ்ண கானம்" செய்து கொண்டு தரையில் புரண்டு புரண்டு கிருஷ்ணனை வேண்டுவார். ஜனங்களோ இவரைப்பார்த்து பிரமித்து நின்று "இவர் ஏன் சாஸ்திரங்களின்படி நடக்கலாகாது? மகாபண்டிதராயிற்றே! இவ்வாறு ஏன் புரளுகிறார்?" என்று பிரமித்து நிற்பார்கள். ஸ்ரீ கிருஷ்ணனின்மீது அவருக்குள்ள அன்பு மனநிலடங்காது "ஹரிபோல்! ஹரிபோல்!" என்று கூவிக் கூத்தாடுவார். பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் நடனமாடியதை ஹரிபக்தன் நினைத்துக்கொண்டால், அந்த வைபவம் தன் கண்முன் நிற்பதாக திடமான நம்பிக்கை கொண்டால் உடனே ஹரிதாஸன் தன்னையு மறந்து நிற்கிறான்.

கணபதி.

(128-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)
நிரூபர்: ஓர் பக்தர்.

சிந்து பால்யபருவம் முதற்கொண்டே மிகவும் பராக்ரமசாலியா யிருந்தான். சில சமயங்களில் அவன் சந்திரனை பிழிந்து அமுர்தபானம் பண்ணுவான். பலதடவை அவன் குன்றுகளை பந்துபோல் காலால் உதைத்து விளையாடுவான். சமுத்திரங்களையெல்லாம் ஒன்றாய் சேர்ப்பான். அஷ்டதிக்கஜங்களையும் ஐராவதத்தையும் அடித்து ஓட்டுவான், கடைசியாக அவன் சுக்லாச்சாரியரிடம் ஆசீர்வாதம் பெற்று கடவுளைக்குறித்து தவம் செய்ய காட்டையடைந்தான். சம்பு அவன் தவத்தைமெச்சி முன்தோன்றி அவன் மூன்று லோகங்களையும் ஆளும் திரமையையும் கணநாதனை லல்லாது வேறு எவராலும் அவனுக்கு சாவு கிடையாதென்றும் இரண்டு வரங்களைத் தந்தருளினார். சிந்து தன் தேசத்தை யடைந்து தந்தையிடமின்று ராஜ்யபரிபாலன சுதந்திரத்தை தானே வகித்து ராஜ்யபரிபாலனம் செய்துவந்தான்.

சிந்துவின் அரசாட்சி.

சிந்து, மித்ர, கௌதவர் என்ற இரண்டுமந்திரிகளுடனும் திரண்ட சேனையுடனும் முதலில் பூலோகத்திலிருந்த அரசர்களை யெல்லாம் வென்றான். பிறகு சுவர்கலோகம் சென்றதும் தேவேந்திரன் கைதாக்கப்பட்டமையால் சுவர்கலோகமும் அவன் குடையின் கீழ் அமர்ந்தது. சிலவருடங்கள் வரையில் சம்பு, நிசம்பு என்ற தானவர்கள் அவ்விடத்திற்கு பிரதிநிதிகளாய் இருந்தார்கள். சிறுது காலங்கழிந்த பிறகு சிந்து நாகலோகத்திற்குச் சென்று நாகராஜனை செலித்ததால் த்ரைலோகாதிபதியானான். சிறையில் அடைக்கப்பட்டிருந்த இந்திரன் ஓர் வண்டு உருவங்கொண்டு ஸ்ரீமன் நாராயணனிடம் சென்று தனது கஷ்டத்தை முறையிட்டுக்கொண்டான். விஷ்ணு பெருத்த படையுடன்சிந்துவுடன் போர்புரிந்தார். சத்ருவின் பராக்ரமத்தைக் கண்ணுற்று விஷ்ணு "சிந்து, உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு சிந்து "தேவரீர், தாங்கள் தங்களுடைய சேனைகளுடன் அடியேனையும் அடியேனின் ராஜ்யத்தையும் காப்பாற்

வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். சத்யசீலரான மகாவிஷ்ணு தன் வாக்கின்படி அங்கேயே தங்கினார். ரிஷிகள் சிந்துவின் இம்சையைப் பொறுக்கமாட்டாமல் கைலாசத்தை அடைய நேர்ந்தது. பரமேஸ்வரன் அவர்கள் முன் தோன்றி "கூடிய சீக்கிரத்தில் கணபதி அவதரிப்பான். அவன் சிந்துவைக் கொன்று உங்களை துன்பத்திலிருந்து மீட்பதுமல்லாமல் தேவதைகளையும் சிறையினின்று விடுவிப்பான்" என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

கணபதியின் பிறப்பும், பால லீலைகளும்.

க்ரீஷ்மருது ஆரம்பமாயிற்று. தென்காற்று வீசத்தொடங்கிற்று. சங்கரன் பார்வதியுடன் ஓர் நந்தவனத்தை அடைந்து அங்குள்ள மந்தார புஷ்பம், பாரிஜாத, சண்பகம், மல்லி முதலிய பூக்களின் அழகுகளை கவனித்துக்கொண்டு உலாவிக்கொண்டே சந்திகாந்திக் கொப்பான ஓர் கற்மண்டபத்திற் சென்று அமர்ந்தனர். அம்மண்டபத்தின் கற்களில் இரண்டு யானைகள் செதுக்கப்பட்டிருந்தன. பார்வதி பரமேஸ்வரர்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்தபொழுது கோடி சூர்யனின் ஒளிக்குச் சமமான ஓர் ஜோதியை கண்டார்கள். அப்பொழுது கணபதி அஜ்ஜோதியினின்றும் வெளிவந்து உமா மகேஸ்வரர்களுக்கு நமஸ்கரித்தார். சிவனும் பார்வதியும் குழந்தையை எடுத்து முத்தமிட்டு கணபதி என்று நாமம் சூட்டி கைலாசத்தைச் சேர்ந்தார். கணபதி பாத்ரபதமீ சுக்லபக்ஷம் சௌதியன்று சந்திரன் ஹஸ்த நக்ஷத்திரத்தில் இருந்த சமயத்தில் தோன்றினார். ஆகையாலேயேதான் இப்பொழுதும் அந்த சுபதினத்தைக் கொண்டாடுகிறோம். கணபதியின் ஜனனம் சிந்துராஜனுக்கு பயத்தை உண்டாக்கிற்று. அவன் கட கடவென்று நடுங்கினான். சத்ருவை சிறுவயதிலேயே கொல்ல முயன்றான். ஆனால் மந்திரிகள், ராக்ஷசர்களை மாறுவேடத்தோடு அனுப்பி சத்ருவை வதை செய்யவேண்டுமென்று ஆலோசித்தார்கள். அரசனும் அவர்களுக்கிணங்கி தினந்தோறும் ஆயிரக் கணக்கான அரக்கர்களை அனுப்பினான். அனுப்பியவர்களில் ஒருவரும் திரும்பவேயில்லை. ஆயிரக் கணக்கான இராக்கர்களில் மிகவும் பராக்ரம சாலிகளாயிருந்த வியோமாசுரன், க்ருத்ராசுரன், கமடாசுரன், விக்ருதாசுரன், சன்சலாசுரன் முதலியவர்களும் தங்கள் முயற்சியில் நிஷ்பலர்களாய் கணபதியால் மரணமடைந்தார். விநாயகனின் லீலைகளைக் கண்டதேவதைகள் ஆனந்தத்தையடைந்தார்கள். சிலநாட்கள்கழியவிஸ்வகர்மன்சூர்யகிரணங்களால் பாசத்தையும், அங்குசத்தையும் செய்து பார்வதி பரமேஸ்வரர்களை ஸ்துதித்து கணபதியின் முன் வைத்து நமஸ்கரித்தான். கணபதி பரமேஸ்வரனின் விடைபெற்று அந்த அஸ்திரங்களைப்பெற்று அவைகளை துஷ்ட நிக்ரஹத்திலும் சிஷ்ட பரிபாலன காலத்திலும் உபயோகிப்பதாக வாக்களித்தார்.

தாஸர பதம்—19.

தாஸர பதம்.

பாண்டுரங்க விட்டல.

மோஹன ராகம் : ஆதி தாளம்.

எனனித்து மெச்சிசுவெனெ எனெ விடல || ப.

அனுபல்லவி.

தீனரக்ஷகனே நின்ன த்யானவீயோ விடலய்ய ||
ஓதி நின்ன மெச்சிசுவெனே வேத தந்தஜநிகித்தெ
வாதிசி நின்ன மெச்சிசுவெனே ஆதிசேஷ சயன
[னே|| 1
ஆடி நின்ன மெச்சிசுவெனே ம்ருடனய்ய நய்ய
[னே ||
பாடி நின்ன மெச்சிசுவெனே பவனஜனொடயனே
சின்ன வித்து மெச்சிசுவெனே சிரிதேவிரமணனே
பூர்ணநந்த ஸ்வாமியே புரந்தர விடலய்ய 3

இராகம்: நாதநாமக்ரிய. ஆதிதாளம்.

ஜய பாண்டுரங்க, நானின்ன மனகே பாரெனே(ப.
நாநின்ன மனகெபாரெ பந்தரெ ஈ பவத
பலெயொளு சிலுகுவெனே ஜயபாண்டுரங்க அ.
கெட்டகிராதகன பெட்டதந்த பாபவ
சுட்டுவால்மீகியெனிசித்யோ ஜயபாண்டுரங்க 1
அதிப்ரஷ்ட்ட அஜமிளன அந்த்யசமயதல்லி
அந்தகன பாதெ பிடிசித்யோ ஜயபாண்டுரங்க 2
அம்புஜநாபனே குப்ஜெடொங்கனு தித்தி
குசலதிந்தவள கூடித்யோ ஜயபாண்டுரங்க 3
ப்ரீதியிந்தலி சபரியுண்ட எஞ்சலமெத்து
முகுதி மார்கவ தோரித்யோ ஜயபாண்டுரங்க 4
ஐதுமந்தி கூடெ சரசவு த்ரௌபதிகெ
பந்தலஜ்ஜய காயித்யோ ஜயபாண்டுரங்க 5
குண்டகோளகாத பாண்டவர பக்ஷ ஹிடிது
குதுரெயமுந்தெ ஓடித்யோ ஜயபாண்டுரங்க 6
கணிகெகண்டகிய அகணித பாபவகளிது
வைகுண்டதல்லி நிலிசித்யோ ஜயபாண்டுரங்க 7
தொத்தின மகனமனெய குடுதெபாலனு சவிது
விதுரன ஸ்லாக்யமாடித்யோ ஜயபாண்டுரங்க 8
எல்லானுத்தரிசித்யோ புரந்தரவிடல நீ
யாகெ என்னனு மரெத்யோ ஜயபாண்டுரங்க 9

இராகம் தோடி. ஆதிதாளம்.

விட்டல விமலசீல பாலகோபால
திட்டமூருதி ஸ்ரீலோல (ப.
அட்டுவகளரெதெ குட்டி கெடஹிமதி
கொட்டு சலஹொ ஜகஜட்டி பண்டரிராய(அ
யதுவம்சோத்பவ கேசவ ஹே ஏகமேவ
மதுவைரி மஹாவைபவ
சதமலநந்தா ஸ்வபாவ மத்குலதைவ
ஹ்ருதயாப்ஜ இனபாந்தவ
விதிநதி பித நாரதமுனி ஸன்னுத
கதன கர்கச வைரி ஸதமலகாதுர
பதெபதெகெ ஸம்பதவிய பயசுவ
ம்ருதுமனதொளு நில்லு பதுமினிவல்லப 1
துதிபரதேவ பார்திவ நித்யப்ரபாவ
பதிதபாவன சுரஜீவ
அதிசயலீலா மானவ நரகண்டீரவ
ச்யுதிதூரநாதி குருகோவ
ரதிபதி பித சதக்ரது சுதசாரதி
துதிசுவெ கதி பதஹீதநாகி தோரோமா
ருதமத ஸ்ரீதஜன சதுரா சதத சங்
கதிகொடு முகுதிகெ திதிசுத மதன 2
சரணு சரணு சர்வேச இட்டிகெ வாச
துருளர ஸங்கவிநாச
பரமபுருஷ விலாச நிரவகாச
வரப்ரதபூர்ண ப்ரகாச
மொரெஹொக்கெனெ நின்ன சரண சரஸிஜவ
ஹரியென்னெளகிப்ப மரவெகளெது நின்ன
ஸ்மரணெ மாடுவந்தெ கருணதிந்தலி நோடு
தொரெ விஜய விட்டல புரந்தரப்ரிய 3

தாஸர பதம்—20.

மத்யமாவதி ராகம். ஆடதாளம்.

எந்து காய்பெனோ பாண்டுரங்க மூருதிய ப.

இந்து பாக நிவாச நரந சாரதிய அ. ப.

அருணப்ஜோபம சாரு சாணங்குளி நகா
தாணீந்துஸ்சவி திரஸ்கரிசுவ ப்ரகா
கிருகெஜ்ஜெ கடக நூபுர பெண்டெ சபா
தெரெ ஜானு ஜங்கெ பாசுர ரத்ன முகுர 1

ரம்பபோலுவ ஊரு பொம்பண்ணும்பரவ
கும்பி மஸ்தகதோள்ளி தம்பதி பொளெவ
கம்பு மேகல கன்ஜ கம்பீர நாபி
அம்புதிசாயி விட்டலன விக்ரஹவ 2

லவகுக்ஷித்ரிவளி பார்கவிவக்ஷ உரவு
த்ரவிபோல்வ கௌஸ்துப நவ வைஜயந்திய
சுவிசால வக்ஷதோள் விவித ஹாரகளு
நவநீதசோர நீரஜபீட பிதன 3

பதக சரிகெ ஜாம்பூனத கம்புகண்ட
மதகரி பாஹுவு சதுர புஜகீர்த்தி
பதா சங்காச அங்கத ரத்னகடக
பதுமாருண கரயுக்ம கடியவிட்டவன 4

வித்ரு பிம்போபம சல்வவதன கெந்துடிய
பிதுராப தசனகுட்மல கிருநகெய
கதபு கன்னடி நாசாதுதி சம்பகதெனய
உதகேஜாயத நேத்ர யதுவம்சோத்பவன 5

ஜ்வலித குண்டல கர்ன லலித ப்ரூயுகள
பொளெவ பாலசசாங்க திலகாங்கித பால
அளிஜாலவெனிப குந்தள ரத்னசகித
கலதொளத மகுட திக்வலய பௌகுவன 6

சடகூர்ம ரூபிய கிடி நரஹரிய
வடு பார்கவ காகுஸ்த சடகம்சத்விஷய
நிடிலாம்பக சஹய களகடகாரி பீமா
தடசாயி ஜகன்னாத விட்டலனக்ருதிய 7

நாதநாமக்ரிய ராகம். ஆதிதாளம்.

கண்டெ பண்டரிராயன தன்னனு
கொண்டாடுவா ப்ரியன விட்டலன ப

சம சரண புஜன, நிகமா
கமததிகெ கோசான
அமித பராக்ரமன ருக்மணி
ரமண சுலக்ஷணன விட்டலன 1

காமி தார்த்த ப்ரதன, சிரி துலசி
தாம விபூஷணன
சாமஜபதிபாலன த்ரைஜக
ஸ்வாமி சித்சுகமயன விட்டல[illegible] 2

கோகுல போஷகன, முனிபுண்ட
ரீக கொலிது பந்தன
லோக விலக்ஷணன சரணா
சோக வினசனன விட்டலன 3

சந்ர பாகவாசன, விதிவிஹ
கேந்ர முகார்சிதன
இந்ரோத்பல நிபன குணகண
சாந்ர சுரோத்தமன விட்டலன 4

ஸ்வேதவாஹன சகன, சதிகெ பாரி,
ஜாதவ தந்தித்தன
வீதசோகபயன ஸ்ரீஜக
நாத விட்டலரேயன 5

பந்துவராளி ராகம். ஆதிதாளம்.

விட்டலய்ய விட்டலய்ய ப.
தடிக்கோடி நிபகாய ஜகன்னாத அ. ப

பஜிசுவெ நின்னனு அஜபவசுரனுத
பஜகாமரதரு குஜனகுடாரி 1
நீ கருணிசதெ நிராகரிசலு என்ன
சாகுவாரோ தயாகர மூருதி 2
சரணகதானு பொரெவெனெம்ப தவ
பிருது காணே சிரிவர ஜகன்னாத 3

வெங்கடேச மகாத்மியம்.

5-ம் அத்தியாயம்.

(138-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

நித்யசுத்தனான பரமாத்மா மற்றவர்க்கு நமஸ்கரிப்பதால் என்ன பலன் அடைகிறான்? புண்ணியம் ரிஷிகளுக்காக ஏற்படுத்தப்பட்டது. பாவமானது ஏற்படுத்தப்படவே யில்லை. அக் காரணத்தாலேதான் உண்மையை உணர்ந்த ரிஷிகள், தேவதைகள், பிதுர்கள், அரசர்கள், பிராம்மணர்கள், வைசிய சூத்திரர்கள், அரக்கர்கள் முதலான எல்லோரும் மஹா விஷ்ணுவை பூஜிக்கிறார்கள். எல்லோராலும் பூஜிக்கப்படும் லக்ஷ்மீபதியான ஸ்ரீமன் நாராயணன், கோயில்கொண்டிருக்கும் ஸ்வாமி புஷ்கரணியோடு கூடியதான வராஹ க்ஷேத்திரம் மிகவும் புண்யஸ்தலம் என்பதையும், அங்கு செல்பவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு முதலியவைகளை அடைவார்கள் என்பதை சொல்லவும் வேண்டுமா? கடந்த ஜன்மங்களில் செய்த நற்வினையின் பயனாக வெங்கடகிரியின் தரிசனம் உண்டாகும். அதிலும் சதர்ஸம் மகா முக்தி ப்ரதமானது.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் 6.

ஒரு சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் கன்னாடியின் முன்சென்றுவிலையுயர்ந்தஆடைகளையும்ஆபரணங்களையும் அணிந்து திருநாமமிட்டுக்கொண்டு சுமார் காததூரம்வரையில்வாசனைவீசும்படியான சிறந்த தைலம் முதலியவைகளைப் பூசிக்கொண்டு, புஷ்பஹாரங்களால் புஜங்களையும் கண்டத்தையும் அலங்கரித்துக்கொண்டு தாம்பூலம் தரித்து, நாமபெட்டி கன்னாடி முதலியவைகளை சரிகைதுணியில் கட்டியிருந்த ஒரு சிறு முடிச்சியை கையிலெடுத்துக்கொண்டு உச்சைஸ்ரவஸ் என்ற குதிரையின் மீதேறி சேஷகிரியை விட்டிறங்கி வேட்டையாட காட்டிநுட்பிரவேசித்தார். வெங்கடேசனின் குதிரையின் வேகத்தைக் கேட்டு புதரில் பதுங்கிக் கிடந்த புலி, கரடி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களெல்லாம் அங்கு மிங்கும் ஓட ஆரம்பித்தது. ஸ்ரீனிவாஸன் அவைகளையெல்லாம் கொன்று மற்றுமிருந்த நரி, யானை, மான், காட்டு எருமை முதலிய மிருகங்களை வேட்டையாடிக்கொண்டே வந்தார். அச்சமயத்தில் சிறிது தூரத்தில் ஓர் மதம்பிடித்த யானை மிகவும் வேகமாய் செல்வதைக்கண்ணுற்ற வெங்கடேசன் அக்கஜத்தைப் பின்தொடர்ந்தான். யானைக்கு முதலினும் பயம் அதிகரித்தது. அதுவும் களைப்பில்லாமல் $1\frac{1}{2}$ காவத தூரம் ஓடிற்று. ஸ்ரீனிவாசனும் பின் வாங்காமல் பின் தொடருவதைக்கண்ட யானை இனி ஸ்ரீனிவாசனிடமிருந்து தப்பமுடியாதென்று எண்ணி உடனே ஸ்ரீனிவாசனுக்கு நமஸ்கரிப்பதுபோல்கீழேவிழுந்து தன் துதிக்கையைமேலே தூக்கிக்கொண்டு தலைவணங்கியது. அச்சமயத்தில் சமீபத்தில் சில மங்கையர்கள் விளையாடிக்கொண்டிருந்ததை ஸ்ரீனிவாஸன் கண்ணுற்றான் என்று சூதர் சொல்ல சௌனகாதி ரிஷிகள் சூதரைப் பார்த்து "ஏ மகாரிஷியே அங்கு விளையாடிக் கொண்டிருந்த கன்னிகைகளின் வரலாற்றை அறிய ஆவல் கொண்டுளோம். ஆகையால் அதை அறிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

சூதர் சொல்வது.

ரிஷிகளே, அக்கன்னிகையின் வரலாற்றை கேட்கிறீர்களா. நல்லது. துவாபரயுகத்தின் கடைசியில் பரதவம்சத்திற் தோன்றிய பாண்டவ கௌரவர்களின் யுத்தம் முடிவு பெற்றதும் 28-ம் கலியுகத்தில் விக்ரமாதித்யன் மொதலான அரசர்

வெங்கடேச மகாத்மியம்—18.

விண்ணுலகையடைந்த ஆயிர வருடங்களுக்குப் பிறகு சந்திர வம்சத்திற் சுவீரன் என்ற ஓர் அரசன் பிறந்தான். அவன் சுதர்மன் என்ற மகனைப்பெற்றான். ஆகாசராயன் தோண்டமான் என்ற இருவர் சுதர்மனுக்கு பிள்ளையானார்கள். அவ்விருவரும் எல்லா ஜனங்களாலும் விரும்பப்பட்டனர். ஆகாசராயன் மூத்தவன். தோண்டமான் இளையவன். இருவரிடமும் தர்மமும் விஷ்ணு பக்தியும் குடிகொண்டிருந்தது. அவர்கள் தோண்டமான் என்ற நகரில் செங்கோல் செலுத்தி வந்தனர். அந்நகரில் தனம், தான்யம் முதலியஎல்லாவிதசம்பத்துகளும்நிறைந்திருந்தது. எவ்வித பயமுமின்றி பிரஜைகள் சுகமாக வாழ்ந்து வந்தனர். அவனும் எவ்வித கவலையுமின்றி நீதிமுறையை தவறாது ஆண்டுவந்தான். அவனுக்கு எல்லா சம்பத்துகள் நிறைந்திருந்தும் ஓர் கவலையால் அவன் மனம் வருந்தி, உணவில்லாமல் உடல் மெலிந்துவந்தது. இப்படியிருந்துக் கொண்டிருந்தபொழுது ஒரு நாள் அரசன் தனித்து தன் சையாகிரகத்தில் அமர்ந்திருந்த சமயத்தில் அவன் குருவை வரவழைத்து "ஏ குருவே, எனக்கு தேர், யானை, குதிரை, கால் படை என்ற நான்கு விதமான சேனைகளாலும் மற்ற செல்வங்களாலும் அடையக்கூடிய சுகங்களையெல்லாம் அனுபவித்தாய்விட்டது. அநேக விதமான தர்மங்களையும் செய்தாய்விட்டது. தீர்த்தயாத்திரைகளும் எல்லாம் முடிந்துவிட்டது. எது செய்தபோதிலும் எனக்கு ஓர் புதல்வன் பிறக்கவில்லையே என்ற கவலையால் நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன். புத்திரனில்லாவிட்டால் பிதுர்கள் மோக்ஷத்தை யடையமாட்டார்கள் என்று வேதம் வேதியோர் கூறுகின்றனர். நான் புத்திரனையடையும் வரத்தை படைத்து வரவில்லைபோல் காண்கின்றதே. என்ன செய்வேன். எந்த கர்மத்தை செய்துளேனோ. எந்த கர்மத்தின் பலனை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறேனோ ? அறிகிலேன். மகன் முகத்தைப் பார்த்தவனல்ல. குழந்தை அழும் குரலையும் கேட்டவனல்ல. மகனுடன் கூடி ஒரு வேளையாவது பொன் பாண்டத்திற் புசித்தவனல்ல. ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆண்குழந்தையை அன்போடு அணைத்துக் கொண்டு முத்தமிட்டவனல்ல. குழந்தையுடன் கொஞ்சி குலாவி விளையாடும் அதிருஷ்டம் இல்லையே. ஐயோ, நான் பாவி. துர்நடத்தையையுடையவன். லோபி. ஆகையால்தான் புத்திரனைப் பெறாமல் இருக்கிறேன். பிள்ளைக்குப் போட வேண்டுமென்று பலவிதமான ஆபரணங்களையும் ஆடைகளையும் செய்வித்திருக்கிறேன். அவைகளை அணிந்துக்கொள்ள ஓர் புதல்வன் இல்லையே. நான் யாரைப்பார்த்து "கண்ணா, வாடா, ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேண்டும் ?" என்று எப்பொழுது கேட்பேன். எமதூதர்கள்வந்து "அரசா தாமதம் செய்யாதே. எமனிடம் வா" என்று இழுத்துச்சென்று எமன் முன் நிறுத்தினால், புத்திரப்பலனற்ற நான் அவனுக்கு என்ன பதிலுரைப்பது. ஏ குருவே, நரகத்தை யடையும் விதவைகளை சபைகளில் அவமதிப்பது போலவும், குகையில் இருக்கும் பாழுங் கிணற்றிற்க் கொப்பாகவும் அல்லவோ என்னை ஒப்பிடுகிறார்கள். ஏ வேதியரே, நான் என்ன செய்யட்டும். எங்கு போகட்டும். என் கதியென்ன. எந்த கடவுளை வணங்கினால் எனக்கு புத்திர சந்தானம் உண்டாகும்? குழந்தை அழுதுக்கொண்டிருக்கும்பொழுது கோபத்துடன் என் மனைவியை திட்டி விஸ்வாசத்துடன் குழந்தையை, 'அப்பா, கண்ணே. வா அழாதே' என்று தேற்றுவேன். "குழந்தைக்கு பாலூட்டு, இல்லா விட்டால் உதைக்கிறேன். அவன் கையில் கல்கண்டு, பாதாமி, அந்த சின்ன பொம்மை எல்லாவற்றையும் கொடுத்து சமாதானப் படுத்து' என்று கூச்சல் போடும் பாக்யம் எனக்கு இல்லை

(தொடரும்.)

மத்வ மதோத்தார சுளாதி.

(முன்தொடர்ச்சி.)

ஆஞ்ஞெ இதனோடி ஹேளி கேளி ஆ
க்ராணிசி மொதலு இதர விஸ்தாரவெல்லா
பூரீதவாகலி நிரந்தர பிடதலெ
ஆனந்த தீர்த்தர கருணதெ எனெம்பெ
க்யானபரிபூர்ண விஜய விட்டல ரேயா
தியானமாடுவ ஜனகெ அதி சுலபஸாத்யா 4

ஆதிதாளம்.

ஸ்ரீமுத்து உடுபின பாத்ரயே யாத்ரெ
ஸ்ரீமதானந்த தீர்த்த குருகளே குருகளு
பூமியொளகெ இதகெ சமாதிக காணெ
ரோமாரோமதல்லி புண்யதும்பி துளுகுவது
ஸ்ரீமத்வைஷ்ணவ ஜன்ம ஜன்மவென்னி
ஸ்ரீமத்விஷ்ணுபக்தி இதெ பக்தியென்னி
யாமயாமகெ ஸ்மரிஸி சகல சம்பதவக்கு
ஈ மனோத்ஸாஹ இல்லி புட்டிதந்தெ
ஒம்மெகாகதீ க்ஷேத்ர நோடலு ஆகோதிதகோ
தாமஸ பிதன லோகக்கெ சாமாவிபுத
ஸ்தோமகொண்டாடதகெ சர்வா
கமதிந்தாகாம்புதி நாசவாஹது யாத்ரெயிந்து
சமதம கணதொளகிப்பா
மா மனோஹர விஜய விட்டல ரேயா
நேம நித்யதல்லி மனசு கொடுவனு 5

ஜதெ

மத்வராயர கருணபடது பாவனனுகி
சித்தனதுவது விஜய விட்டலன பொந்தி 6

அஹன்னீக சுளாதி.

அறிவிப்பு :—ஜனங்கள் செய்யும் எல்லா காமங்களும் பகவானின் சேவைகளேயாகும். ஆனால் நாம் செய்யும் வேலைகளில் அச்சமயங்களில் எந்த பகவான் இருக்கிறார் என்பதையும் அவைகளை செய்யும் கிரமங்களையும் நன்கறிந்து அந்தந்த அபிமான தேவதைகளை தியானித்து பகவானுக்கு சமர்ப்பிப்பது மிகவும் உன்னதமானது. நாம் செய்யும் கர்மங்கள் ஹரிசேவை என்பதையும் எந்த கர்மத்தை செய்யும்போது எந்த கடவுளை தியானிக்கவேண்டுமென்பதையும் இந்த அஹன்னீக சுளாதியால் அறியவும்.

துருவதாளம்.

குணகாலதேசகர்ம க்ரிய நானு தீர்த்ததேஹா
ஜனன மிக்காத நால்கு பகெ வியாபார
ஜனன நானு ஜந்துவருஷ கண்டத்வீப அப்திககன
ப்ரணவ மந்ராவரண உபகரண
இனிதரல்லி அபிமானிகள திளிது உதயாஸ்த
மான பரிபந்தர சன்சரிசு
தினதினதல்லி எள்ளனிது பிடதெ சா
தன மாடு மரியதெ சர்வதல்லி
ரெனசு பாரதி கருட கணபதி புஷ்கர
அனலாங்கனெ உஷாபுஷ்காதனபா
இனசசி பூமிதர்ம மிகலாத தேவதெகள
மனஸிகெ தந்து தத்தத்பகவத்ரூபா
மனன மாடுவது மாதுமாதிகெ பிடதெ
ஜனன மரணதிந்த தூரகானோ
இனிது சிந்தெயிந்தநிகிள கர்ம மாடிதா
கனபுண்யக்கெ மிகலு அடிகடிகெ
தனுவ தண்டனெயில்லா பாரிகெ பாயிதொது
தணிது பருவதல்லா திரிகிதிரிகி
ஹணஹொன்னு வெச்சமாடி பரிதாகுவதல்ல
மனதொளுண்டு பாக்யவல்ல
அனிமிஷ குணதவரு வாசவாகிப்பரு
அனுதின காருண்யவனெ மாள்பரு
தினுகுவ க்யானவிதெ பக்தி வைராக்ய மிளிதா
கொனெகெ இது தொரெயதலெ முக்தியில்லா
எணிகெ மாடலோ மனுஜ நானு நன்னதெம்போ
தனுமன சயஸ்த விஷயதல்லி

சுளாதிகள்—18.

நினகெ ஸ்வதந்த்ரவ ஹச்சிகொள்ளதே ஹரி
அணுமஹத்து ரூபயுக பாதனெந்து
குணிதமாடுவது இதே நினகெ குப்த அர்சனே
காணே ஈ பரி திளிது நாம கீர்த்தனகெ
எணிசி கொண்டாடுத நித்யா
குணிசி நோடலோ த்யான ஜபதபசித்த சிந்தா
மணியாகிப்பனு நமகெ சித்தா
மனுஜரிகெ அருஹுவ தானுக்ரஹிசுவ சா
தனதல்லி பாளுதிப்ப கலியுகதல்லி
த்ருணபொம்ம பரியந்த தாரதம்ய பேததிந்தா
குணபல்லவனிகெ ஈ மாது சித்தா
ப்ரணதார்த்தி ஹர நம்ம விஜய விட்டலரேயன
நெனெசு நெனெசு பகவத்கீதார்த்தவன்னு
[திளிது 1

மட்டிதாளம்.

ப்ராதக்காலதல்லி நாராயணனெந்னி
ஸ்ரீ துளசி விஷ்ணு ஸ்மரணமாடி
மூத்ர புரீஷ விசர்ஜன சமயதல்லி
நீ திளியோ கேசவ நாமக ஹரியா
மாது மரியதிரு ம்ருத்திகா சௌசக்கெ
ஸ்ரீத்ரிவிக்ரமனு தந்ததாவன ஹரி
நேதுர மொதலாத ப்ரக்ஷாலனக்கெ மாதவ
கோதடவரிசுவ காலகெ கோவர்தனனேத்தா
வாதனெடைய நம்ம விஜய விட்டல மூர்தியா
மாத்ராகால பிடதெ நெனிசி தன்யனாகோ 2

ரூபதாளம்.

நத்யாதி ஸ்நானமாடுவ காலக்கெ வராஹா
ஊர்த்து புண்ட்ரகளல்லி கேசவாதி மூர்த்தி ஸ்ரீ
முத்ரெ யிடுவாக க்ருத்தோல்காதி ஜது
சந்தியாகாலதல்லி ராமனெந்னி
சித்தவாகி ப்ராணிக்ராஸதல்லி அனி
ருத்தாதி பஞ்ச பகவன்மூர்த்திகள ஸ்மரிசு
முத்தெ முத்தெ கவள மெல்லுவாரம்
பதல்லி வாசுதேவ ஆபோசனகளல்லி ஸ்ரீஹரி
பொத்துடுவாக வஸ்த்ரதல்லி உபேந்த்ர பக
வத்ரூப சிந்திசு உபவீத வாமன
சுத்த மங்களார்த்தி கொம்பாக பார்க்கவ வைஸ்வ
[தேவதல்லி
இதெ மூர்த்தி நிஸ்சய நி
ர்தோஷ தீர்த்ததல்லி கிருஷ்ண ராமவ்யாஸ
நிர்தார த்ரிவார சங்கோதககெ முகுந்தா
பத்மமூருதி நம்ம விஜய விட்டலரேயன
க்ருத் கிரஹதொளு நெனசு சந்தோஷவனுபவிசு

ஜம்பெதாளம்.

துத்து ப்ரதி துத்திகெ கோவிந்த பக்ஷகள
எத்துவாக அச்சுத சாகாதி தன்வந்ரி
மத்தெ பரமான்னதல்லி பாண்டுரங்க நவ
நீதவல்லி தாண்டவ கிருஷ்ணஸ்வாமி
புத்தி க்ஷீரான்னதல்லி கோபால ஸ்ரீனிவாஸ
ததளீபத்தெல க்ருத பக்ஷதல்லி வைகுண்ட
உத்துத்தெ கதளி ஜம்புத்ராக்ஷ சூதமது
கித்தளி தாளிப்ப நாரிகேள நாரங்கா
தாத்ரி மிக்காத ஹலமெல்லுவாக எதுகு
லோத்தம பாலகிருஷ்ணன்ன ஸ்மரிசு மனவெ
சித்தஜபிதா நம்ம விஜயவிட்டலனங்ரி
சித்ததல்லி நிலிசு உதா பூர்த்திய கைசு 4

த்ருபுடதாளம்.

பானகதல்லி நாசிம்ஹ மூருதி
கங்காபானதல்லி விஷ்ணு த்ரிவிக்ரமா
மேணு கமனகமனதல்லி கருடகேதன
எனெம்பெ த்விஜால்லி சர்வரூபா
கானமாடுவகால யோகேஸ்வர தேவ
ஆனந்த கதாகால ஹயாஸ்ய வியாஸா
மாணதெ துளசி தூர்வாங்குர சகல ப்ர
சூண முடிவாகால ராமசத்த கபில
சுனீதியலி நாசிம்ம

(தொடரும்.)

நோட்டீஸ்.

நிரூபர்கள் எழுதும் வியாசங்களுக்கு நாம் எவ்விதத்திலும் ஜவாப்தாரியல்ல.

செய்தித்திரட்டு.

திருப்பதி பிரார்த்தனை.

காணமற்போன நகை திரும்பிய அதிசயம்.

வேலூர், பிப்ரவரி 15—

சென்ற 8-10-30 மித்திரனில் 9-வது பக்கம் 6, 7 பத்திகளில் திருப்பதிப் பிரார்த்தனை என்ற தலையங்கமிட்டுவேலூர்தோட்டப்பாளையம் வக்கீல் ஸ்ரீமான் பி. எஸ். வெங்கடவரதாச்சாரியின் வீட்டில் திருப்பதிபிரார்த்தனைத் தவறுதலுக்காக சுமார் 1400 ரூபாய் பெறுமான வைரக்கம்மல் திடீரென்று காணமல் போன விவரம் வெளியாயிருக்கிறது. சென்ற 5 மாதகாலமாய் ஓர் வித விசேஷ சம்பவமும் நடைபெறவில்லை. சுமார் 15 தினங்களுக்குமுன்பு ஸ்ரீமான் அய்யங்காரின் குமாரி ஸ்வாமி பிரார்த்தனைக்காக ரூபாய் 1000 முடிப்புக் கட்டிவிட்டால் நகை 15-ம் நாள் வந்து சேரும் என்று கனவு கண்டதாக அறிவித்தாள். அதன்படியே முடிப்புக் கட்டப்பட்டதாம். ஏற்கெனவே அறிவித்தபடி 15-ம் நாளாகிய சனிக்கிழமை (14-2-31) இரவு ஒரு மணிக்கு வக்கீலின் வீட்டுத்தெருக் கதவு படபடவென்று தட்டப்பட்டது. அது சமயம் வீட்டின் தெருத் திண்ணையில் சில கக்ஷிக்காரர்கள் படுத்துக்கொண்டிருந்தனர். எதிர் வீட்டில் இருக்கும் கலெக்டராபீஸ் குமாஸ்தா ஸ்ரீமான் பட்டாபிராமய்யா யாரோ கதவைத் தட்டுகிறார்கள் என்று தன் வீட்டுக் கதவைத் திறக்க வருகையில், எதிர் வீட்டுக் கதவுதட்டப்படுவதை அறிந்து திரும்பிப் போய் படுக்கயத்தனிக்கையில் தெருவில் யாரோ நடக்கும் சப்தம் காதில் படவே தன் வீட்டுக் கதவை திறந்து வெளியே வந்து பார்த்தார். சமீபத்தில் யாரோ நடக்கிறமாதிரி சப்தம் கேட்டதே தவிர உருவம் ஒன்றும் தெரியவில்லை. உடனே கையில் லாந்தல் எடுத்துக்கொண்டு தெருக்கோடிவரையில் போய்த் தேடிப்பாத்தும் ஒன்றும் புலப்படாததால் வீடு திரும்பினர். அது சமயம் வக்கீலின் வீட்டிலிருக்கும் ஸ்ரீமான் ஆருவமுதய்யங்கார் வெளிவந்து யாரோ சோதாக்கள் கதவைத் தட்டியிருக்கவேண்டுமேயொழிய வேறில்லை, போய் படுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். ஸ்ரீமான் பட்டாபிராமய்யா தன் வீடுசேர்ந்து படுக்கப்போனர். ஸ்ரீமான் ஆருவமுதய்யங்காரும் படுக்கைக்குச்சென்று படுக்கயத்தனிக்கையில் படுக்கையில் ஏதோ பொருள் உறுத்துவதாக ஓர்வித உணர்ச்சி தோன்றி பிரக்ஞை தவறி "படுக்கையில் ஏதோ உருத்துகிறது, ஸ்ரீனிவாஸன் கம்மல் கம்மல்" என்று வாய் குளறி சப்தமிடவே, யாரோ திருடன் அகப்பட்டாப்போல் இருக்கிறது என்று கும்பல் கூடிவிட்டது. உடனே கட்டைபோல் விறைத்திருந்த ஆருவமுதவின் கீழ்த் தடவிப்பார்க்க முன்னல் காணமற்போன வைரக்கம்மல்கள் இரண்டும் கிடைத்தன. அதில் கம்மலில் ஒரு கல் காணவில்லை.

தோஷக்கல் நீக்கப்பட்டது,

எற்கெனவே ஸ்வாமி ஸ்வப்னத்தில் கூறியபடி அந்தக்கம்மலில் தோஷமுள்ள கல்லை நீக்கியிருப்பதாயும், இனி அந்தக் கம்மலை அணிவதில் யாதொரு கெடுதியின்றி நன்மையே விளையுமென்றும், அந்தப்பெண் அந்தக் கம்மலையேதான் அணியவேண்டுமென்றும் உத்தரவாகியிருக்கிறது.

இந்த கம்மல் தேடியெடுக்கும்போது வக்கீலின் அண்டை அயல் வீட்டார் சுமார் 15 ஆண் மக்களும் அநேக பெண்மக்களும் கூடியிருந்தனர். இது விஷயம் டவுனில் ஓர்வித ஆச்சர்யத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

(சுதேசமித்திரன்)

சந்திர க்ரஹணம்.

நிகழும் பிரஜாபதி நாமசம்வத்ஸரம் செயித்ர மாதம் சுக்ல பக்ஷம் பௌர்ணமி வியாழக்கிழமை (2-4-1931) ஹஸ்த நக்ஷத்திரத்தில் (கேதுக்ரஸ்த பிம்பாதிக சந்ரோபராகஹ, ஆக்னேய ஸ்பரிஸா வாயுவ்ய மோக்ஷ க்ராஸப் பிரமாண 1½.)

விபரம்.	ஸ்டாண்டர்ட் டைம் பிரகாரம் ராத்ரி.	
	மணி.	நிமிஷம்.
ஸ்பரஸ காலம் ...	11	53
நிமீலன காலம் ...	12	52
பரவக்ராஸ காலம் ...	1	37
உன்மீலன காலம் ...	2	23
மோக்ஷ காலம் ...	3	22
ஆத்யந்த புண்யகாலம் ...	3	29

க்ரஹணபலன் :

இந்த கிரஹணத்தால் வர்தகர்கள், வைசியர்கள், சில்பி வேலையாட்கள், ராயஸக்காரர் இவர்களுக்கு சுகமுண்டு. மழை குறைவு.

இன்று மத்தியானம் 12 மணிவரையில் போஜனம் செய்யலாம். பௌர்ணமி ஸ்ரார்த்தத்தை வியாழக்கிழமை பட்டினியாயிருந்து மறுநாள் நடத்தவேண்டியது,

ஹஸ்த நக்ஷத்திரத்திற் பிறந்தவர்களும், கன்யா ராசியில் பிறந்தவர்களும் (என்றால் உத்தரை, 2, 3, 4 பாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தின் 4 பாதங்கள், சித்தையின் 1, 2 பாதங்கள் இவைகளில் பிறந்தவர்கள்) சாந்தி செய்துகொள்ளவேண்டும்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 10 வீதப்படி 50,000 பங்குகளுடன் கூடிய ரூ. 5,00,000 மூலதனங் கொண்ட 'ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபி விருத்தி காரணி பாங்கு லிமிடெட்' என்ற ஓர் பாங்கு பெங்களூரில் ஸ்தாபிதமாயுளது, எல்லோரும் முக்யமாய் மாத்வ மதாபிமானிகள் ஷேர்தாரர்களாய் சேர முன் வருவார்களாக.

விபரங்களுக்கு:

பிரசிடெண்டு

"ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபி விருத்தி காரணி சபை லிமிடெட்," பெங்களூர் நகர்.

என்ற விலாசத்திற்கு எழுதவும்.

ஸ்வீகாரங்கள்.

1. 'மாத்வ-மித்திரன்' வால்யும் 3, பத்திரிகை 5, 6.
2. சுபோதா, வால்யும் 6, பத்திரிகை 5.
3. சன்மார்க போதினி. வால்யும் 1 பத்திரிகை 2.
4. ஹரிகதாம்ருத சாரம். 19ம் பாகம்.
5. கர்தவ்ய. வால்யும் 1, பத்திரிகை 5.
6. ஸ்ரீமத்வ முனிதாஸ.